# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2257/20 - 2021 දෙසැම්බර් මස 06 වැනි සඳුදා - 2021.12.06

***2257/20 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (ஆ) வின் கீழான கட்டளை*

***2021 ஆம் ஆண்டின் 253 ஆம் இலக்கக் கட்டளை***

*எனது குறிப்பு இல. : 4-3/18/2020/WS/49.*
*பி. செ. குறிப்பு இல. : KDS/PDB/4/3/2/23.*

*காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (ஆ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*எஸ். எம். சந்திரசேன,*
*காணி அமைச்சர்.*

*காணி அமைச்சு,*
*"மிஹிகத மெதுர",*
*இல. 1200/6, காணிச் செயலகம்,*
*ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,*
*2021, நவெம்பர் 17.*

**அட்டவணை**

*1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், கண்டி வடக்கு பாததும்பர.*

*2. **காணியின் விபரம்** : மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாததும்பர பிரதேச செயலாளர் பிரிவில், பல்லேகம்பஹ மேற்கு கோரளே சிறு பிரிவில் கிராகடுவ (631) கிராம அலுவலர் பிரிவில், கிராகடுவ கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட Maha/PTD/2020/455 ஆம் இலக்க 2020.12.28 ஆந் திகதிய முதற் சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர் விஸ்தீரணத்தையும் கொண்ட காணித் துண்டு :-*

*கண்டி வடக்கு பாததும்பர ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தில் கிராகடுவ நீர்த்தேக்கத்திற்கான நடைபாதை மற்றும் குழாய்கள் அமைப்பதற்காக மேலதிக காணியின் ஒரு பகுதி உரிமையை எடுத்துக்கொள்ளல்.*


1A - G35511 - 20 (2021/12)


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*01.* **துண்டு A - ஹபுகஸ்பிட்டிய வத்தை - விஸ்தீரணம் : *0.0162* ஹெக்டயார்.**

வடக்கு: ரீ. எம். டபிள்யூ. எஸ். பண்டார உரிமை கோரும் ஹப்புகஸ்பிட்டிய வத்தை ; கிழக்கு : ரீ. எம். டபிள்யூ. எஸ். பண்டார உரிமை கோரும் ஹப்புகஸ்பிட்டிய வத்தை மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) ; தெற்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) மற்றும் என் எச். எம். டபிள்யூ. ஏ. டி. பி. ஏகநாயக உரிமை கோரும் ஹப்புகஸ்பிட்டிய வத்தை ; மேற்கு : என் எச். எம். டபிள்யூ. ஏ. டி. பி. ஏகநாயக உரிமை கோரும் ஹப்புகஸ்பிட்டிய வத்தை மற்றும் வீதி.

EOG *12 - 0056*

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

### *2021* ஆம் ஆண்டின் *254* ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல. : *4-3/14/2020*/CEB/*82*.
பி. செ. குறிப்பு இல. : DS/KU/ LND/ACQUS/*1/5*.

*காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இங்கு கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

எஸ். எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

*காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, காணிச் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 01*

**அட்டவணை**

*1.* **காணி எடுத்தல் உத்தியோகத்தர் :** பிரதேச செயலாளர், குச்சவெளி.

*2.* **காணியின் விபரம் :** கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டத்தில், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில், கட்டுக்குளம் பற்று கிழக்கு சிறு பிரிவில் கும்புருபிட்டி *(240)* கிராம அலுவலர் பிரிவில், கும்புருபிட்டி கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட *2020.11.25* ஆந் திகதிய மற்றும் Tri/TKCH/*2020/172* ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர் விஸ்தீரணத்தையும் கொண்ட காணித் துண்டு :-

*01.* **துண்டு ஏ - பெரியதோட்டம் - விஸ்தீரணம் : *0.0334* ஹெக்டயார்.**

வடக்கு : டோப்போ பி. பி. *37* இன் துண்டு இல. *232* (பிரிவு T.P. *346434*) மற்றும் துண்டு இல. *233* (வீதி (பிரதேச சபை)) ; கிழக்கு : டோப்போ பி. பி. *37* இன் துண்டு இல. *232* (பிரிவு T.P. *346434*) ; தெற்கு : டோப்போ பி. பி. *37* இன் துண்டு இல. *232* (பிரிவு T.P. *346434*) ; மேற்கு : டோப்போ பி. பி. *37* இன் துண்டு இல. *233* (வீதி (பிரதேச சபை)) மற்றும் துண்டு இல. *232* இன் (பிரிவு T.P. *346434*).

EOG *12 - 0057*